# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

## பாடல்மனனப் போட்டி 2006
## மத்திய பிரிவு (8-10 வயது)
(திருவள்ளுவர் அருளிய திருக்குறள்களில் பத்து - கருத்துடன்)

### அறத்துப்பால் அதிகாரம் - செய்நன்றி அறிதல்
நன்மக்கள் ஒருவரிடத்துப் பெற்ற உதவிக்கு என்றும் நன்றியோடு இருப்பர்.

1) காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

இதன் பொருள்: (தக்க) காலத்தில் செய்த உதவி சிறிதாயிருப்பினும் (அ∴து) உலகத்தில் மிகப் பெரிதாகும்.

2) உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

இதன் பொருள்: மாற்றுதவி, (முன் செய்த) உதவியின் அளவினதன்று: இவ்வுதவியைப் பெற்றவரது தன்மையின் அளவினதாகும்.

3) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

இதன் பொருள்: எவ்வகை அறங்களைக் கெடுத்தவர்கட்கும் பிறகேனும் பிழைப்பு உண்டாகும்: (ஒருவர்) செய்த உதவியைக் கெடுத்த மகனுக்கு (எப்போதும்) பிழைப்பில்லை.

### அறத்துப்பால் அதிகாரம் - ஈகை
மனிதப் பண்புகளில் தலையாயது இல்லார்க்கு உதவும் தன்மை

4) வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

இதன் பொருள்: இல்லாதார்க்கு (யாதாயினும்) ஒன்றைக் கொடுப்பதே ஈகை: மற்றைய கொடையெல்லாம் குறித்த எதிர்ப்பைக் கொடுக்கும் நன்மையை உடைத்து.

5) ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்

இதன் பொருள்: பெரியோர்க்குப் பொறுமையாவது பசி பொறுத்தல் (அ∴து) அப்பசியைத் தீர்ப்பாரது பொறுமைக்குப் பின்.

6) அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

இதன் பொருள்: (பொருள்) அற்றவரது (எல்லா நன்மைகளையும்) அழிக்கும் பசியை (ஒருவன்) தீர்க்கக்கடவன்: அது பொருள் பெற்றவன் ஒருவனது வைப்பிடம் (ஆகும்).

7) ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

இதன் பொருள்: தாம் உடைய பொருளை (க்கொடாது) வைத்து(ப்பின்) இழக்கின்ற அருளிலாதார், (பிறர்க்குக்) கொடுத்து (அதனால் அவர்குண்டாகும்) முகமலர்ச்சியினால் தாம் அடையும் இன்பத்தைக் கண்டறியாரோ?

## பொருட்பால் அதிகாரம் - இறைமாட்சி

நல்லாட்சி புரிகின்ற அரசு மக்களின் செம்மையான வாழ்விற்கு அவசியம்.

8) படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

இதன் பொருள்: படை, குடி, உணவுப் பொருள், அமைச்சு, நட்பு, காவல் (என்றும்) ஆறு உறுப்புக்களையும் உடையவன் வேந்தர்களுள் ஆண் சிங்கம் (ஆவான்).

9) இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

இதன் பொருள்: (பொருள் வரும் வழியை) உண்டாக்கலும், சேர்த்து வைத்தலும், (அவைகளைக்) காப்பாற்றுதலும், காப்பாற்றியவைகளைப் பகுத்தலும் வல்லவன் அரசன் (ஆவான்).

10) கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி

இதன் பொருள்: வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல், முகமலர்ந்து இனிய கூறுதல், செங்கோன்மை, குடிகளைப் பாதுகாத்தல் என்றும் நான்கையும் உடையவன் வேந்தருக்கெல்லாம் விளக்காம்.

---

## பாடல் மனனப் போட்டிக்கான விதிகள்:

1. போட்டிகளுக்கெனச் சிறுவர்களுக்கான பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டியின் போது உச்சரிப்பு(30), மனனஞ் செய்யும் திறமை (15), பொருளுணர்ந்து கூறுதல் (25), சபை மரபும் ஆதிக்கமும் (30) ஆகியன கவனிக்கப்படும். போட்டியாளரின் முகவுரை சுருக்கமானதாக அமையவேண்டும்.
2. பாடல் மனனப் போட்டி போட்டி- (மத்திய பிரிவு)
போட்டிக்கென கொடுக்கப்படும் பாடலை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.
3. போட்டியாளரின் வயது 31-07-2005 அன்றுள்ளபடி கணிக்கப்படும்.
4. மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எமமுடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
5. போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
6. எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

தமிழ் ஊக்குவிப்புப் குழு
அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்